REGD. No.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வகுளமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே" — வகுளாபரணர்.

"அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது" — திருவள்ளுவர்.

"உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே" — கம்பர்.

தொகுதி 1. Vol. 1. | தாது வருஷம் பங்குனி மாதம். MARCH 1937. | பகுதி 3. No. 3.

## உள்ளுறை.


| | | | |
|---|---|---|---|
| 1. | சடகோபதத்துவம் | பத்திராசிரியர். | 37. |
| 2. | திருவாய்மொழி அநுபவம். | ஸ்ரீ உபவே அட்வகேட் ஏ. வி. கோபாலாச்சாரியார் ஸ்வாமி. | 44. |
| 3. | ஸ்ரீ வகுளபூஷண பாஸ்கரோதயம். | ஸ்ரீவானமாமலை மடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே அனந்த கிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி. | 47. |
| 4. | வர்த்தமானங்கள். | ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்காரவர்கள். | 49. |
| 5. | துண்டு துணுக்குகள். | பாரத்வர்ஜி. | 53. |
| 6. | பன்மணித்திரள். | ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்காரவர்கள். | 53. |
| 7. | சிறுகதை. | | 55. |


பத்திராசிரியர்:— ஆர். கேசவய்யங்கார், M.A.B.L., அட்வகேட்.

வருஷம் 1-க்கு ரூ. ஒன்று. ][ தனிப்பிரதி அணா ஒன்றரை.

சிறு கதை.

# பார்ப்பனியும் பாண்டியனும்.

பாண்டி நாட்டிலே கொற்கை நகரிலே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு பாண்டியன் அரசு செலுத்திவந்தான். அக்காலத்து அந்நகரிலே கீரந்தை என்ற ஒரு ஏழைப்பிராமணனிருந்தான். அவன் மனைவி கற்பிற்சிறந்தவள். வறுமை பீடிக்கவே அயல் நாட்டிற்சென்று பொருளீட்ட எண்ணினான் அந்தணன். தன் எண்ணத்தை இல்லாளிடம் கூறவே யுவதியாகிய அவள் ஒரு துணையின்றி தனித்திருப்பது எங்ஙனம் என்று ஏங்கினள். அதற்கு அப்பார்ப்பான் "நீ வருத்தம் கொள்ளவேண்டாம். நம்மூர் அரசன் சிறந்த நீதிமான். அவன் துணையொன்றே போதும்" என்று கூறித்தேற்றித் தேசாந்தரம் போய்விட்டான்.

நாட்கள் சில சென்றன. மாறுவேடந் தரித்து நகர்சோதனை செய்து கொண்டு சென்ற பாண்டியன் நள்ளிரவில் கீரந்தை மனைவி இல்லத்தருகு வந்ததும் என்றுமில்லாத தீய எண்ணம் வேந்தனுக்கு உண்டாக மெல்லச்சென்று கதவினைத்தட்டலும், தன் காதலனையே சிந்தித்துக்கொண்டிருந்த அப்பெண்ணரசி நாயகன் வந்தனர் என நினைந்து ஓடி வந்து நல்வரவு கூறினள். தீய வெண்ணம் முதிர்ந்த பாண்டியன் அவளைப்பற்றினான். அந்நியனின் ஸ்பரிசமென்று கண்டு "ஐயோ என் பிராணநாதா! அரணில்லா வீட்டில் தனித்து இருத்தி வேந்தன் துணையென்று போனீரே! எனக்கு இப்போது யாராவர் துணை? மன்னவனே! கொற்றவனே!" என அரற்றினாள்.

கேட்ட பாண்டியன் நடு நடுங்கி, பற்றினை விட்டு ஓடி திட்டிவாயில் வழியாய் அரண்மனை புகுந்தான். தூக்கம் வரவில்லை. தன் தீங்கை நினைந்து உருகினான். விடிந்ததும் அறிவிற் பெரியோரை அவையில் அழைத்து "புத்திமான்களே! கணவனைப்பிரிந்து தனித்திருந்த ஒரு கற்புடையரசியை இராவிற்போய் கெட்ட எண்ணத்துடன் பற்றிய பாவிக்கு என்ன தண்டனை?" என்றான். "அத்தகைய கொடியன் கையைக்குறைத்தலே தகுதி" எனக் கூறினர் அவ்வறிஞர். கேட்ட உடனே க்ஷணநேரந்தாமதியாது அம்மன்னன் தன் உடைவாளை உருவித் தன் கையை வெட்டி வீழ்த்தியதோடு நில்லாமல் நடந்தவற்றை அனைவரும் அறிய விளம்பினான். உண்மை கூறியதற்கு சான்றோர் பெருவியப்புற்றனர்.

தர்மமும், புகழும், நட்பும், பெருமையும் பிறன் மனைவியை விரும்புவாரை அடையா. பிறன் மனைவியை இச்சிப்பதினும் மகத்தான கேடு வேறில்லை. இராமபிரான் மனைவியை விரும்பியதின் பயனாக சுற்றத்தோடும் அழிந்தான் இராவணன். அறம் வெல்லும். பாவம் தோற்கும். வேலியே பயிரை மேய்ந்தால் என் செய்யலாம். அறம்தலை நிறுத்துவதே அரசர் கடமை. கற்புடை மகளிர் தம் கற்பினாலேயே காக்கப்படுகின்றனர்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# வகுளமாலை.

தொகுதி 1. Vol. 1. | தாது வருஷம் பங்குனி மாதம். MARCH 1937. | பகுதி 3. No. 3.

## சடகோபதத்துவம்.

தேவுமற்றறியேனெனும் பாவிடைத்
தேவர் சேவடி தாவிய தாண்மறை
நாவர் யாவரும் நாரணனார்கழற்
காவரென்றவர் காப்பியல் செப்புவல்.

மதுரகவியார் எந்நிலைநின்று தத்துவத்தை விளக்கியருளினர், அவர்விளக்கியருளிய தத்துவம் எத்தன்மைத்து என்பதை ஆராயப் புகுவாம். மதுரர்நின்றது அரியஓர் அறநிலை. அறத்தே பிறந்தது மதுரம். புறத்தே பிறந்தது நச்சு. அறம் விளைவிக்குமதே வேதம். வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் பாடித்தந்த மறைமுடிச்சோதி குடிகொண்ட கோயில்தான் மதுரகவியாழ்வார். அக்கோயில்கொண்டவர்தான் தமிழ்மறைக்கடவுள். மதுரரும், ஆழ்வாரும், கோயிலும், கடவுளுமாய் ஒன்றி விளங்கியதற்கு உவமை வேண்டில் சத்துருக்கினாழ்வானும், பரதாழ்வானும் ஒன்றியதைத்தான் ஒப்பிடலாம். வான்மீகி பகவானை அடிபொற்றியே வடமொழிக்கவிவாணராய காளிதாஸர் துன்பறுத்த சத்துருக்கினாழ்வானை "மதுராக்ருதி" என்றும், அவர் அமைத்த நகரை "மதுரை" எனறும், இயம்பினர். அம்மதுரர் நின்றநிலையினும் இனிதாம் நம்மதுரர் நின்றநிலை. "தேவுமற்றறியேன்" என்றிம் மதுரர் பாடிய இன்னிசையே மதுரகவியாயிற்று. கண்ணன்கழலிணைகொண்டு இவர் ஆழ்வார் வெற்றிக்கொடிப்பட்டிகை நாட்டிய நன்னகரியே தென்னன் மதுரையாயிற்று. மகரக்குழைசேர் சுந்தரத்திருத்தோளனே இருமதுரைக்கும் தனித்தலைவன். சத்துருக்கினதத்துவமும் மதுரகவிதத்துவமும் ஒன்றேயாம் என்ற நுட்பம் வரும் பகுதியில் விளங்கும்.

இடைப்பட்ட இருபொருளையும் பொய்ந்நின்றமையால் இடரென்றே கண்டுகடிந்து அறமே செய்து வீடே பெற்ற நம்மதுரர் ஒருவரே அறத்தான் மிக்காரனைவர்க்கும் உவமைஆவர். "நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும், நம்பினேன் மடவாரையும் முன்னெலாம், செம்பொன்மாடத்திருக்குருகூர் நம்பிக்கன்பனாயடியேன் சதிர்த்தேனின்றே" என்று தாம் அறவீரியம் பெருத்து அவாவுற்றுச்சடகோபன் பொன்னடியாம் வீடுபெற்று விடாய் தீர்ந்ததற்குத்தாமே காரணமோதியருளினர். "பாடும் என்நா அவன் பாடல்" என்பர் ஆழ்வார். "குருகூர் நம்பிபாவினின்னிசைபாடித்திரிவனே" என்பர் மதுரர். "காமசாரோபவதி" "லப்த்வாநந்தீபவதி" "தீராஸ: கவயஉந்நயந்தி" என்ற வேத வாக்கியங்களுக்கெல்லாம் மறைகாணும் பெருந்தகையோர் இம் மதுரப்பதிகத்தே பொருள்தெளிவர். ஆழ்வார்கண்டது பரஞ்சுடரை. பரஞ்சுடர்கண்டது மதுரரை. மதுரர்கண்டது ஆழ்வாரை. இவ்வாறு உயர்வறஉயர்நலமுடைத்தாய அறநிலையுற்றாராதலான், இவர்கண்டதே உண்மையாம், பாடியதே கவியாம், முதிர்த்ததே சுவையாம், பெருக்கியதே இன்பமாம். சடகோபன்பொன்னடி மேவுதல்தான் மறைப்பயன்கோடலாகும். இவர் இக்கோடலராகலான் இவர் திருக்கண் மற்றொன்றினைக்காணு, இவர் செந்நா மற்றொன்றினைப்பாடா, இவர்நற்கரம் மற்றொன்றினைத்தொழா. "ஆடியாடி அகம்கரைந்து இசைபாடிப்பாடிக்கண்ணீர்மல்கி எங்குந்நாடிநாடி நரசிங்கா" என்று எழுமவரே ஆழ்வாரெனும் அமுதவெள்ளம். "கண்ணிநுண்சிறுத்தாம்பு" எனும் அரும்பதிகம் பாடி எண்டிசையுமறியப்பேரருள் இயம்புமவரே மதுரகவியாரெனும் மதுரம். ஆழ்வாரே அமுதம். மதுரரே மதுரம். அமுதமும் மதுரமும்போல் ஆழ்வாரும் மதுரரும். இந்நிலைநின்றுகவிபாடிய இவர் ஒருவரே மதுரகவியாராயினர். மதுரக்கவிகட்கெல்லாம் இவர்குழைத்ததீங்கவியே படிச்சந்தமாயதுபற்றி மதுரகவி எனும் கிளவி இவரிடத்தே பொருளுறப் பொலியாநின்றது. இவ்வாறு பொலிந்து நின்றநிலை ஒன்றியோர் இவர் ஒருவர்தான் எனவே கூறலாம், சான்றும் காணலாம். முன்னர் ஒருமை கூறுவல், பின்னர் சான்றுகாட்டுவல்.

வேதங்கள் மீண்ட நிலமெல்லாம் மெய்யுணர்ந்து மேவிக்கவி

சொல்லும் வன்மை உறும் தறுவாய்கள் மூன்றெனவறிகின்றேம். அவற்றுளொன்றும் ஜீவாத்மா என்பான் பரமனடிகொண்டே சட்டைகழட்டிய கட்செவியென்ன மண்ணுடாக்கை அறவே கழித்து நீள்விசும்பேகிப் பரனடிச்சோதிவெள்ளமேகண்டு, தொன்மறைசெழித்துப் பொன்னுமாய்நாறித்திகழும் ஸ்ரீசடகோபன் நிற்கும் திருநாரணன்பாதபீடத்தளவும் சென்று "நின்தாளிணைக்கீழ் வாழ்ச்சியான்சேரும்வகையருள்" என்று திருவடி தொழுதெழுங்கால், திருநாரணன்தானே தான் பெற்றபேற்றை இவனையிட்டுப் பேசுவிக்க உள்ளமுகந்து "நீர் ஆராயிருக்கிறீர்?" என்புழி, இவனும் தனக்கவனெவ்விடத்தான் யானுர், என்ற நிலையைக்கழித்து மெய்ந்நிலைதெளிந்தபடியே விண்ணப்பம் செய்துகொள்ளும் தறுவாய் என்று மறைமுடிச்செல்வனுர் தூமொழி ஆய்ந்து தெளிகின்றேம். இது தாமரைக்கண்ணனுலகில் நிகழும் திவ்ய சரிதை. மற்றோர்கால் இவ்வுலகே தோன்றிய அப்பரஞ்சுடர்தானே தன்னிணையடிப்போதுக்குத்தொண்டுசெய்தே உயிர்தரிக்கும் இயல்பினரான இளையபெருமாள் திருமொழியால் உண்மைவிளக்க அவாவுற்றுத்தானுமே திருமகுடம் தாழ்த்திச் செவிகளாரப்பருகும்படி வழுவிலாமொழியமுதம் பொழியும் தன் திருவடியார் வாய்கொண்டு "நீரிவர்க்கென்னுவீர்?" என்ன, அன்னாரும் இன்னிசைபாடி விடையளிக்கப்புகுந்ததறுவாய் மற்றொன்றும். இளையபெருமாள் நின்றநிலை அம்முக்தாத்மா விண்ணப்பித்துக்கொள்ளும் நிலையினும் பெரியதே ஆம். ஆமென்றிசையவல்ல அத்திறத்தனிவன்மை வாய்ந்த ஐந்த்ரவ்யாகரண பண்டிதன் ஸாக்ஷியாய் நின்றநிலை. அந்நிலையினும் பெரிதாம் நம்மதுரர் மெய்ம்மைபாடிப் பாசுரம் பணிதத நிலை. பாவிற்சிறந்த திருவாய்மொழிபகர் பண்டிதரே குருவும் ஸாக்ஷியுமாய் நின்றநிலை. "ஸம்யக்த்வே தஸ்ய ஸாக்ஷாத் சடரிபுர தவா ஸர்வஸாக்ஷீ ஸ ஸாக்ஷீ" என்றது மதுரர்மேவிய நிலையையே அடியொற்றியதொன்றாகும். அவ்விருவரையும் வினவியதுபோலில்லாது நாம் இவர் (ஆழ்வார்)க்கென்னவோம் என்று கண்ணன் தானே மதுரரைக் கடாவினன். இதற்கு விடையளிக்கும் நிலை எத்தன்மைத்தாம் என்பதை இவரளித்தவிடையே கண்கூடாக விளக்கும். முக்தாத்மாவும் இளையபெருமாளும் தம்மெய்ம்மையை விளக்காநிற்பர். அது தம்மைத்தெளிந்த நிலை. இவர் தெளிந்தது தெளியாதே விளங்கிய ஓர் அரிய நிலை. இந்நிலைதான் "அவிக்ஞா

தம் விஜாநதாம்" என்ற மறைஇலக்கணத்துக்கு உண்மையான இலக்கு. இவர் "அவிக்ஞாதம்" என்று தெளிந்ததுகண்டு அப்பன் இவரை "விக்ஞாதா" என்று தெளிந்து இவர்வாயிலாயே தன்மெய்ம்மையைத் தானே உலகுக்குத் தெளிவித்தருளினன் முழுதுணர் நீர்மையினோர்க்கும் அரிதுணர்பான்மைத்தான திருமாலார் பொன்னடி இவர்பால் மெய்த்தமைதான் இவர் தெளியாததற்கு அடியாயது. கண்ணன்தானே அருளிய தன் இருதிருக்கண் முன்னுற்றதத்துவங்கள் இரண்டாயிருக்கச் செய்தேயும் அவ்விரு தத்துவங்களின் வேற்றுமையை அக்கண்கொண்டு தான் காணாதது கண்டு தன் திருக்கண்கள் கண்டவாறே "தேவிற்சிறந்த திருமாலாய உம்மைப் பாவிற்சிறந்த திருவாய்மொழிகுழைக்கும் தென்குருகூர்நம்பியினும் மற்றொருவராய்க் காணாதான் நீரிவர்க்கென்னாவீர் என்றறியேன்" என்று தத்துவத்தை விண்ணப்பித்துக்கொண்டார். அத்தகைய இருதத்துவங்களையும் விகற்பிக்கவொண்ணாதவாறு வேறுபடாத ஒருவாக்கியம்கொண்டு ஓர்தத்துவமாம் எனத் துணிந்த இவரே மீமாஞ்சகர்கட்கு இறைவராவர். விரிக்கில் இதன் பொருள் :—"பெருமாயனுதலான் நீர்தேவே. பரத்துவ இலக்கணமோதும் வேதவாக்கியங்களுக்கெல்லாம் வேதம் தானே 'எல்லாம் வல்ல பெருமாயத்தேவே' என்றஞ்சிவிளித்த தேவரீர் ஒருவரே தான் இலக்கியம். அத்திறமாமாயனை உம்மை ஆதியான் என வியாதரோதிய 'கம்பனாதிகரண' இலக்கணம் கொண்டு, தண்டதரனை தேவென்று அஞ்சிக்கடக்கக்கடவனை அடியேன், அவ்வச்சம் கடந்து, "என் அப்பன்" என்றணுகியதுபற்றியே, நம்திருவருளே பெற்றுப்பாடும் அன்பர்க்கெல்லாம் நல்லன்பராய் விளங்கும் எம்குருகூர் நம்பியினும் வேறுபட்டவரன்று என்றே தேறி, அவ்வியாதர் தாமே பேற்றுக்கெல்லாம் அடைவென்ன ஓதியருளிய 'ஈக்ஷதிகர்மாதிகரண' மெய்ம்மையிடையே கண்டுகொண்டென்னைக் காரிமாறப்பிரான் பண்டை வல்வினைபாற்றித் திருத்திப்பணிகொள்ளும் பான்மை விளங்கிய இந்நன்னிலையே ஊன்றிநின்றேன்" என்று அவ்விருதத்துவங்களையும் பிரித்தறியாவாறு என்றுமே ஒன்றிவிளங்கும் ஓர்தனித்தத்துவமென்றே கண்டு துணிந்தார். ஈதே இவர் துணிபின் தனிமாண்பு. இத்துணிபின்பெருமையை எம்பெருமானார்தாமே "ஸ்ரீ சத்துருக்கினாழ்வான் பெருமாளுக்கு நல்லனைபடி அவனையல்லதறியாத ஸ்ரீபரதாழ்வனையல்லது வேறொன்றறி

யாதபடியானுன்" என்று இராமாயணம்கொண்டே காட்டியருளினுர். "இதுவே ப்ரயோஜநமானுல் சொல்லுமிகையெல்லாம் பொறுக்குமிறே" என்று ஸ்ரீபாஷ்யகாரர் பாசுரச்சுவைமிகைப்பார் நம்பிள்ளை என்பார் எனும் சொல்லும் மிகையாகாஎன்க. ஸ்ரீபாஷ்யம் முறையால் நன்கோதியுணர்ந்தாரே ஈடுபெட்டாமுமாறு இம் மதுரப்பதிகத்துப் பொருந்தித்திகமும் அரிய பல பிரமமீமாஞ்சை நுட்பங்கள் ஈண்டுக்கூறில்பல்கும் என்றஞ்சி உற்ற இவ்வொன்றையே சிறிது குறித்து நிறுத்தினம். "மெய்ம்மையே" என்றந்வயத்தாலும், "தேவுமற்றறியேன்" என்று வ்யதிரேகத்தாலும் மதுரர் உண்மை உணர்த்தியபடி என்று நம்பிள்ளைபணிப்பர். "ஜந்மாத்யஸ்ய யதோந்வயாதிதரச்ச.........தாம்நா ஸ்வேந ஸதா நிரஸ்தகுஹகம் ஸத்யம் பரம் தீமஹி" என்ற ஸ்ரீபாகவத மங்கலப்பாசுரத்தின் உட்கருத்து நன்கு விளங்கியது இம்மதுரப்பதிகத்தேதான். "தைவதம் தநுஜவைரிபாதுகா" என்றும் "அந்வயவ்யதிரேகாப்யாம் அந்வமீயத வைபவம்" என்றும் பாதுகாஸஹஸ்ரம் முழங்கும் "மெய்ம்மையே" என்றதற்கு "அங்க்ரிஸரோஜதத்வ" என்ற ஆளவந்தார் ப்ரயோக பலத்தால் பொன்னடியை விஷயமாக்கித்தத்துவமாயும், "மேவினேன்" என்றதையே ஸித்தாந்தமாக்கி உபாயபுருஷார்த்தங்களாயும், தத்த்வஹித புருஷார்த்தங்கள் இவ்விடத்து ஒன்றிநின்றமை உய்த்தறியத்தக்கது. இந்நிலைதான் "அநந்யதைவத்வம்" என்று இராமாயணமும், "அநந்யாதிபதித்வம்" என்று பிரமசூத்திரமும் ஓதியதற்கு உட்கருத்தாம். இவ்வாறு மறைமுனிவர் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம் "குருபரப்ரஹ்மத்வம்" "ஆசார்ய தேவத்வம்" என்ற உபநிஷத்தீத விதையாம். இவ்வுபநிடத வாக்கியப்பொருள்கண்டு மதுரர் விரித்ததே மஹா சித்தாந்தமாம். "கடவுளாய கழிபெருந்தெய்வத்தைக்கோயிலாய நல்லாசிரியரில் மற்றொன்றுக யாம் அறியகில்லோம்" என்றதே மறைமுடித்தேசிகனுர் புந்திபொருந்திய மதுரப்பிரமமீமாஞ்சை. சுருங்கச்சொல்லில் ஈதேமதுரர் கருத்தாம்:—திருமாலென ஆழ்வார் காட்டிய தேவரீர், அடியேனுக்குத் திருமாறனெனத் தேவரீர் காட்டுகிற ஆழ்வாராகவே தோற்றுகிறபடியால், ஆழ்வார்க்குத் தேவரீர் பரதத்துவமாகக்கடவீர், அடியேனுக்கு ஆழ்வாரே பரதத்துவமாவர். ஆக, பரதத்துவத்தினும் வேறுபடாதவர் அடியேனுக்கு ஆழ்வார்தான் என்று இவர் உண்மையை உள்ளவாறே கண்டு

கண்டவாறே எண்டிசையுமறிய இயம்பினர். திருநாரணன் தான் தன் திருப்பாதுகமாய ஆழ்வாரை அவரதத்துவமெனக்காணவல்லனாவன். ஏனையரனைவரும் நாதன்பாதுகமாய ஆழ்வாரைப் பரதத்துவமெனவே கண்டடையக்கடவர் என்றதே. இதன் திரண்ட பொருள். "சேஷீ பபூவ யுவயோரபி சேஷசாயி சேஷம் த்வசேஷமபி சேஷபதே ஸ்திதம் வ:" என்றே இம்மதுரப்பொருளைப் பாதுகாஸஹஸ்ரம் திரட்டும் 'தேவுமற்றறியேன்' என்று மதுரகவியார் கம்ஸாரி சடாரிதத்துவங்களை ஒருங்கக்காட்டிய சீர்மை. சடாரி எனும் தனிநிலையிடையே கம்ஸாரியும் ஸம்ஸாரியும் ஒருவர் மாட்டொருவர் அவாவுற்றுச் சந்திசெய்வது என்ற மிக்கவேதியர் வேதத்தினுட்கருத்து நிற்கப்பாடியருளியவர்காண் நம்மதுரர். இவ்வுண்மையையே இங்கண் சிறிது கூறி வரும் பகுதியில் நன்கு விரிப்பாம்.

காப்பளிக்கும் பரதத்துவமும் காப்புப்பெறும் சேதநதத்துவமும் சந்திசெய்யுமாறு விளங்கும் அரிய ஓர் தத்துவம் தான் சடகோபனெனும் தனித்தத்துவம். பரனாப அப்பன் ஒருவனுக்கே உற்றது அவதரணம். மேல் நின்றான் கீழிறங்குதலே அவதரணமாம். காக்கவே பரன் இறங்குகிறான். இறங்கியே காக்கிறான். கீழ்நின்ற சேதநனுக்கே உற்றது உத்தரணம். மேலெழுதலே உத்தரணமாம். உத்தரணம் பெறக்கடவனே அவரன். ஆதலால் சேதநர்களனைவரும் அவரார்களே யாவர். அவரர் உத்தாரம் பெறவே பரன் அவதரிக்கிறான். அவதரணத்துக்கும் உத்தரணத்துக்கும் வரம்புண்டாம். ஓர் நிலைக்குக்கீழ் பரன் அவதரிக்க இயலாது. அதற்குக்கீழிறங்கினால் பரத்துவம் குலையும். அவ்வாறே சேதநர்களும் ஓர் நிலைக்குமேல் உத்தரிக்க இயலாது. அந்நிலைக்கு மேல் விளங்குமது பரத்துவம். பரத்துவம் தன்னை எவ்வளை தணித்துக்கொண்டாலும் காக்கும் தத்துவமாதலான் அது சேதநத்துவத்துக்கு மேலே தான் நிற்கும். சேதநத்துவம் எவ்வரை உயர்ந்தாலும் காக்கப்படும் தத்துவமாதலான் அது பரத்துவத்துக்குக் கீழேதான் நிற்கும். ஆக, எந்நிலையிலும் இவ்விருதத்துவங்களுக்கும் உண்மையில் வாசி குலையாது. காக்க இறங்கும் பரதத்துவமும் காப்புப்பெற எழும் சேதநதத்துவமும் ஒன்றும் நிலைதான் சடகோபன் எனும் நடுவுநிலை. அவ்விருதத்துவங்களையும் சந்திசெய்வித்து மெய்ந்நிலை காக்கும் தத்துவம் அவ்வொன்றே. அம்மெய்ந்

நிலையிடையேதான் பரனும் சேதநர்களும் ஒருவரை ஒருவர் அடையப்பெறுவர். அவ்விடத்தே சேதநர்களுக்குற்றது 'பராப்தி', பரனுக்குற்றது "சேதநஸ்வீகாரம்". அந்நிலைதான் பராவரங்களைக் காக்கும் நிலை. அந்நிலையுற்றே பரன் தன்னைச் சேதநனைப் பாவித்துச் சேதநனைச் சென்னிகலந்து ஆட்கொள்வது. சேதநனும் தன்னைப் பரனைப்பாவித்துப் பரன் திருவடியைப் பெறுவது. ஆழ்வார் சென்னியைத் தன் திருவடி எனக்கருதுவதே பரன் செய்யும் பாவனை. ஆழ்வார் பொன்னடியே சென்னியதெனக் கருதுவதே சேதநர் செய்யும் பாவனை. உத்தமன் எளிதாய அவதரண நிலையும் அதமன் பெரிதாய உத்தரண நிலையும் சடகோபனெனும் மத்திம நிலையில் பொருந்தி ஒருப்படுமாறு அத்தகைய பாவனையை மறை உகந்தது. இப்பாவனை எய்தியே அப்பனும் அடியாரும் முயல்வர் என்று மறை ஓதும். இம்முயற்சியே திருவினை ஆக்கும். ஆழ்வார் தாமே ஆக்கி விளக்கிய திரு ஈதே. இவர் திருவே பேரறிவாளன் திருவாம். அப்பன் முயல்வதே அருள். அடியார் முயல்வதே அன்பு. சாரீரகசித்தாந்தப்ரதாநப்ரதிதந்த்ர மெய்ம்மை பலிக்கும் நிலை ஈதே. ஸர்வசரீரியான பரன் தன்திருவருளே முயன்று "ஆத்மாநம்மாநுஷம் மந்யே" (என்னை மானிடனைக்கருதுவேன்) என்று பொலிந்து நிற்கும் நிலை. அவன் மொய்கழற்கே ஓர் தொண்டராய் மற்றொன்றுமறியாதே "கடல் ஞாலம் செய்தோனும் யானே என்றும்" "கடல் ஞாலமுண்டோனும் யானே என்றும்" என்று அன்பே முயன்று ஆழ்வார் விளங்கும் நிலை. "மத்தஸ்ஸர்வமஹம் ஸர்வம்" என்று ப்ரஹ்லாதாழ்வான் முயன்ற நிலையும் ஆழ்வார் நின்ற நிலையையே அடியொற்றிக்கொண்டதொன்றாகும். அன்பே முயன்று விளங்குவார்க்கெல்லாம் ஆழ்வாரே தலைவராயதுபற்றி அன்பர்க்கெல்லாம் இவரே அன்பராயினர். ஈதே புருடோத்தமனான பகவானும் பாகவதோத்தமரான ஆழ்வாரும் மெய்ப்பிக்கும் பாவனை நிலை. காப்பளிக்கும் அவன் பாவனையை "அபித்யாநம்" என்றும், காப்புப்பெறும் இவர் பாவனையை "சாஸ்த்ரத்ருஷ்டி" என்றும் வ்யாஸ பகவான் கருதுவர். ஆழ்வாருக்கு பகவான்பால் சாஸ்த்ரத்ருஷ்டி என்றது நமக்கு ஆழ்வார்பால் பகவத்ஸ்வபாவத்ருஷ்டியாம் என்று நம்தேசிகனார் மறைச்சுவை பெருக்குவர். அப்பன் முயற்சியே அருள். அடியார் முயற்சியே அன்பு. ஆழ்வார் முயற்சி அப்பன் கருத்தால் அன்பு,

அடியார் கருத்தால் அருள். அப்பனருளும் அடியாரன்பும் சந்தித்துப்பொருந்துமாறு விளங்கும் நிலையே சடகோபனெனும் விலக்ஷணநிலை. சேதநத்துவத்துக்கு முடியாயும் பரதத்துவத்துக்கு அடியாயும் விளங்கும் நிலைதான் சடகோபனெனும் தனிநிலை. ஈதே மாறனும் மங்கல நிலை. "யானென்னை மானிடனாகக்கருதுவேன்" என்றவாறே அவன் புருடோத்தமனையும், "கடல்ஞாலம் செய்தேனும் யானே" என்றவாறே இவர் பாகவதோத்தமராயும் போரப்பொலிந்து நிற்பர். இவ்வாறு ஆதிப்பிரானும் மாறப்பிரானும் ஒன்றிப்பொலிந்து நிற்கும் நிலையை விளக்குவதே மறையாம். இந்நிலையின் தன்மையை விளக்கவே மறை இராமாயணமாயது. இம்மாமறையினுட்பொருள் விளக்கியவர் மதுரகவியாழ்வார். இவர் விளக்கியதே ஒருமையாம். அஃதே சடகோபன் பொன்னடி மெய்ம்மை. கேசவன் சேவடியாய்த் தாமே நின்று கேசவன் தன் மறை தாமே பாடிக் கேசவன்தமர்களைத் தங்குலமாக்கித் தாமே காத்துத்தம்பொருட்டே பயன்கொள்ளும் நற்கோடற்குலபதியாய் விளங்கும் சடகோபன் பொன்னடி யொருமையே மொழியும் நீரார் நம்மதுரகவிப்பெருமான் ஒருவரேதான். இவர் விரித்த ஒருமையின் பெருமை இனி அளவுகொண்டு விளக்கப்படும்.

நான்கு வேதமும் நாறு நாவலர்
தாங்கு நாரணன் தாதுபாதுகம்
நீங்ககற்றியே தங்குலந்தனோடு
ஒங்குமொன்றதென்றோர்ந்தி தோதினேம்.

பத்திராசிரியர்.

---

# திருவாய்மொழி அநுபவம்.

(முன் தொடர்ச்சி)

"ப்ரம்மஜிக்ஞாஸை" என்று ப்ரம்மமீமாம்ஸாசாஸ்த்ரத்தை ஸூத்ரகாரர் தொடங்கினர். 'விரும்பிவிசாரித்து அறிதல்' என்பதைக்காட்டும் 'ஜிக்ஞாஸா' சப்தத்தை ப்ரயோகித்ததால் விசாரிக்கப்படும் ப்ரம்மத்தின் "இனிமையை" முதலிலேயே ஸூசித்தார். அடுத்த ஸூத்ரத்தில் தைத்திரீய உபநிஷத்தில் சொல்லப்பட்ட

ஸ்ருஷ்டிஸ்திதிலய காரணத்வம்'' என்னும் லக்ஷணத்தை ப்ரம்மத்தின் லக்ஷணமாகப் படித்தார். மூன்ருவது ஸூத்ரத்தில் 'சுருதி' என்னும் 'சுடர்' தான் ப்ரம்மத்தை விளக்கும் என்ருர். நான்காவது ஸூத்ரத்தில் ப்ரம்மம் பேரின்பமான பரமபுருஷார்த்தமாக சாஸ்த்ரத்தால் நன்கு விளக்கப்படுகிறதென்ருர். ஐந்தாவது அதிகரணத்தில் தன் ஸங்கல்பத்தினுல் உலகத்தைப்படைக்கும் சேதந காரணமென்றும், அதில் நிஷ்டைமோக்ஷமளிக்குமென்றும், காரணப்பொருள் ஜடப்ரக்ருதிவிலக்ஷணம் (பொறியுணர்வு அவையிலன்) என்றும், விளக்கினர். ஆறுவது அதிகரணத்தில் ஜகத்காரணமான 'ஆநந்தமயன்' என்னும் ப்ரம்மம் 'உயர்வற உயர்நலமுடையது' என்றும், 'உணர்முழுநல' மென்றும் 'எண்பெருக்கு அந்நல' மென்றும், 'ஒழிவிலன் பரந்த அந்நல' மென்றும், (ஆகாசமான ஆநந்தம் என்றும்) தன் ஆநந்தம் முழுவதையும் நமக்கு அளித்து மகிழ்வது என்றும் (ஆநந்தயாதி, ஆநந்தஹேது, ரஸம், என்றும்) அந்நலத்தை அணுகி அந்த ஆநந்தமயத்தை உபஸங்க்ரமித்து (அடைந்து) அவ்வாநந்த ரஸத்தை நாம் பெறுவதையும், ஆநந்தவல்லி ப்ருகுவல்லிகளைக்கொண்டு நிரூபித்தார். அந்தப்ரஹ்மம் நமக்கும் உலகத்திற்கும் உயிரான ஆத்மாவென்றும், சரீரமான ஸகல சேதநாசேதநஜகத்திற்கும், ப்ரஹ்மம் சாரீரமான ஆத்மாவென்றும், இதனுல்தான் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு சாரீரகஸூத்ரம் என்று பெயரென்றும், அங்கு விளக்கினர். ஏழாவது அதிகரணத்தில் நமக்குள்ளும் உலகத்திற்குள்ளும் இருக்கும் ஆநந்தமயன் என்னும் ஆத்மாவும், ஸூரியமண்டலத்தில் ஹிரண்மயமான அடிமுதல் கேசபர்யந்தம் ஒரேசுடராயும், சுடரடியாயுள்ள திவ்யமங்கள விக்ரஹமுடைய பரமாத்மாவும், ஒன்றே, என்றும் விளக்கினர். முதல் நாலு அதிகரணங்களில் ப்ரஹ்மஜிக்ஞாஸையை விதிப்பதும், காரண லக்ஷணத்தைப் பணிப்பது மானப்ருகுவல்லீவாக்யங்களையும், ஐந்தாவது அதிகரணத்தில் நேராக ஸத்வித்தையையும், ஆருவது அதிகரணத்தில் ஆநந்தவல்லீ ப்ருகுவல்லீ இவ்வகளைச்சேர்த்தும் விசாரித்தார். இவ்விஷயங்களனைத்தையும் ஆழ்வார் இத்திருவாய்மொழியில் காட்டுவதை விளக்குவோம்.

ப்ரஹ்மஜிக்ஞாஸை என்று ஸூத்ரகாரர் ஓர் இனிப்பான விசாரத்தைத் தொடங்குவதாக ப்ரதிக்ஞை செய்தார். திருவாய்

மொழி, ப்ரஹ்ம விசாரமாய் இருப்பதோடு, ப்ரஹ்ம அநுபவத்தையும், நமக்கு ப்ரஹ்மத்தின் அநுபாவநத்தையும், விசேஷமாகக்கருதியது. விசார சாஸ்த்ரமே எல்லையற்ற இனிப்பின் அநுபவ சாஸ்த்ரமுமாகவேணும். வேதபுருஷன் ஆநந்தவல்லியில் "ப்ரஹ்மஸ்வரூபத்தை அறிந்தவன் ஸர்வோத்க்ருஷ்டமான புருஷார்த்தத்தை அடைவான்" என்று சொல்லத்தொடங்கி 'ப்ரஹ்மஸ்வரூபத்தையும், அதன் ஞானத்தால், 'பரமவ்யோம' என்னும் பரமபதத்தில் பேரின்பம் அடையலாம்' என்றும், நமக்குள்ளே இருக்கும் உயிரான ஆத்மா 'திடவிசும்பு 'எரிவளி நீர்நிலம்' இவைகளுக்குக் காரணம் என்றும், நம்முள்ளே அவ்வுயிர் ஆநந்தமயமாக இருக்கிறதென்றும், அந்த ஆநந்தமயன் 'நாம் இவன் அவன் உவனு' யும், 'அது இது உது எது'வாயும், 'இல்லதும், அல்லதா'யும், உயிராய் நிற்கும் நிலையால் எல்லாவற்றையும் உடலாகக்கொண்டு விரிந்ததென்றும், அது 'ரஸ'மென்றும், 'ஆகாசமான ஆநந்தம்' என்றும், அது தான் ரஸத்தையும் ஆநந்தத்தையும் அளிப்பதென்றும், அதில் நீங்காத நிலைபெற்றுத் தான்துயர், பயம், முதலியவைகளைத் தாண்டலாம் என்றும் சொல்லி, பிறகு அந்த ப்ரஹ்மத்தின் சிறந்த 'ஸார' குணமான 'ஆநந்தத்தைப்பற்றி மீமாம்ஸை செய்வோம்' என்று ப்ரதிக்ஞைபண்ணி ஆநந்தமீமாம்ஸை செய்யத்தொடங்கிற்று. உயர்ந்த மானிடராநந்தத்திலிருந்து தொடங்கி நூறு நூறாய்ப் பெருக்கிக்கொண்டு (அப்யாஸம் செய்துகொண்டு) போய் ப்ரஜாபதி என்னும் ப்ரஹ்மாவின் ஆநந்தத்தை ஜீவராசிகளின் ஆநந்தத்தில் உயர்ந்ததாகக்காட்டி, அதிலும் நூறு மடங்கு பரப்ரஹ்மத்தின் ஆநந்தமென்று பேசி, கணக்கிலகப்பட்டது, கணக்கில் பெரிது, என்று நினைப்பதைத்தவிர்க 'வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதது' ப்ரஹ்மத்தின் ஆநந்தம் என்னும் நலம் என்றுபேசி; அந்த ப்ரஹ்மத்தின் குணமாகிய ஆநந்தத்தை அறிபவனுக்கு எங்கும் பயம் நீங்கி முடிவிலாப்பேரின்பம் கிடைக்கும் என்று முடித்தது. 'ப்ரஹ்மஞானிமோக்ஷமடைவான்' என்று பேசியதையும், அதற்காக ப்ரஹ்மஸ்வரூபத்தையும் அதில் நிஷ்டையையும் பேசியதையும் நிறுத்தி, ப்ரஹ்மத்தின் குணமான ஆநந்தத்தை அறிபவனுக்குப் பேரின்பப்ராப்தியைச் சொல்லி முடித்தது. ப்ரஹ்ம ஸ்வரூபமீமாம்ஸையாகத்தொடங்கியது ப்ரஹ்மகுணமீமாம்ஸையிலும், அதன் ஏற்றத்திலும், அதன் நிஷ்டையிலும், அதன் பலமான பேரின்பத்திலும்

ஆழ்ந்து குணவர்ணனத்தில் வாசாமகோசரமாய் முழுகிற்று. வேத புருஷன் ஆநந்தவல்லியில் ஆநந்தபரவசமாகச்செய்த ஆநந்தமீமாம்ஸையோடே ஆழ்வாரும் தம்முடைய அநுபவஜடிலமான மீமாம்ஸையைத் தொடங்கினர் என்பது ரஸிக்கத்தக்கது. அதிலும் ஆநந்த ஸ்வரூபத்வத 'உணர் முழுநலம்' என்று பின்புபேசுபவராய் வேதபுருஷன் மிகவும் ஈடுபட்ட ஆநந்தகுணத்துறையில் முதலிலே இழிந்து 'உயர்வற உயர்நலமுடையவன்' என்று ஆநந்த குண விசிஷ்ட ப்ரஹ்மத்தின் தத்துவத்தையும் சுவையையும் காட்டிக் கொண்டு இந்த விசிஷ்டாத்வைத சாஸ்த்ரத்தை ஆரம்பித்தார் என்று ரஸம். 'ப்ரஹ்மத்தின் ஆநந்தகுணத்தை அறிந்து அதில் ஈடுபட்டவன் துயரற்று மோக்ஷமடைவான்' என்று வேதம் பேசியதற்கு விரோதமாக, ப்ரஹ்மத்தின் ஆநந்தகுணம் போய், ஸ்வரூபம் மட்டுமே ஆநந்தம், ப்ரஹ்மம் நிர்க்குணமே என்று சொல்லும் நிர்க்குணவாதத்தின் மிடற்றைப்பிடிக்கிறார் என்பது ரஸம். ஈட்டு பங்க்தியில் இத்தனை ரஸங்களையும் கொள்ளவேணும். 'தேயே சதம்' என்று தொடங்கிய பிள்ளான் வ்யாக்யாநத்துக்கும் இத்தனை ரஸங்களையும் பொருளாகக் கொள்ளவேணும் 'நிஸ்ஸீமோத்யத் குணத்வாத்' என்ற ரத்நாவளி இதையெல்லாம் உட்கொண்டது. மாறன் காட்டிய இந்த ரஸப்பொருளை மாறனடி பணிந்த ராமாநுஜன் 'ப்ரஹ்மம் ஆநந்த மாத்ரமல்ல, கிந்து, 'ஆநந்தீ (ஆநந்த விசிஷ்டன்) என்று ஸ்ரீபாஷ்யத்தில் அறுதியிட்டார். ஸ்ரீதேசிகனும், எல்லா பயங்களும் நீங்குதலைக்காட்டும் அபீதிஸ்தவத்தில் "உம்முடைய ஓர் அத்புதமான ஆநந்தகுணவிசேஷத்தை அறிந்தவன் எக்காலத்திலும் எத்தேசத்திலும், எதனிடத்திலிருந்தும் அச்சப்பட மாட்டான்" என்று அறுதியிட்டார். ஆநந்தகுணம் பொய்யாயின், அப்பொய்யில் நின்ற ஞானம் எப்படி மோக்ஷத்தை அளிக்கும் என்று துஷ்பரிஹாரமான கேள்வி. இதுதான் மிடற்றைப் பிடிப்பது.

(தொடரும்)

ஏ. வி. கோபாலாச்சாரியார்.

:O:

# ஸ்ரீ வகுளபூஷண பாஸ்கரோதயம்.

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரனுற் படைக்கப்பெற்ற உலகின் கண் ஸூர்ய சந்த்ராக்னியென்னும் முச்சுடர்போன்ற கிருதயுகம்,

திரேதாயுகம், துவாபரயுகம் என்னும் மூன்று யுகங்களான அரசர்கள் முறையே அரசாண்டு மறையவே 'காலை வெய்யோற்கு முன்னோட்டுக்கொடுத்த கங்குற்குறும்பர்—மாலை வெய்யோன்பட வையகம் பாவுவர்' என்றபடி கலி அரசன் பட்டமடைந்து ஏகாதிபத்யமாக அரசாளத் தொடங்கினன். அவ்வாறு அரசாண்டு வருகையில் உலகமெங்கும் தமம் முன்னிட்டு ஜனங்கள் நல்வழி தீவழியென்று உணர மார்க்கமின்றிக்கலி அரசன்கோல் நோக்கி வாழ்ந்து வரலாயினர். ஏனெனில் 'கலௌ கார்த்தயுகம் தர்மம் யோநர: கர்த்து மிச்சதி - ஸ்வாமித்ரோஹீதிதம் மத்வா கலிஸ்தம்பாதயே தத': இதன் கருத்து. கலியில் கிருதயுக தர்மத்தை எவன் செய்ய இச்சிக்கிறனோ அவனைத் தனக்குத் துரோகியாக நினைத்துக்கலி கீழே தள்ளி விடுவான் என்பதனால் அவன் கோலையே நோக்கி பலர் நடக்கலாயினர். நாளடைவில் கலி அரசன் புண்ணியங்களென்னும் பொருளையெல்லாம் அபஹரித்துக்கொண்டனன். பாபமாகிய வறுமை உலகிற் பரவிவிட்டது. அதனால் ஜனங்கள் சிறிதும் சுகமின்றி வருந்தவே, 'பரித்ராணாயஸாதூநாம் விநாசாயசதுஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்தாப நார்த்தாய ஸம்பவாமியுகேயுகே.' என்ற கீதை வாக்கியப்படி பகவான் அவதரிக்கக்கருதி, 'ருத்ராணும் சங்கரஸ்சாஸ்மி-ஸேநாநீநா மஹம்ஸ்கந்த:' என்றபடி அர்ச்சாரூபமாக அவரவர் சமயத்துக்குத் தக்க பலபல வடிவோடு உலகிலுள்ள ஆலயங்களில் அமர்ந்திருந்து பக்த ஜனங்களுக்கு எளிதிற் சேவை சாதித்தருளிப்பின்னர் உலகத்திலுள்ள அஞ்ஞான இருள் நசித்துப்போகவும் சாது ஜனங்கள் இதய கமலங்கள் விகஸிக்கவும் பாபங்களான உலூகங்கள் (கோட்டான்) ஓடி மறையவும், தானே வகுள பூஷண பாஸ்கரனாகக் குருகாபுரியில் உதயமானன்.

'த்யேயஸ்ஸதா ஸவித்ருமண்டல மத்யவர்த்தீ நாராயணஸ் ஸரஸிஜாஸநஸந்நிவிஷ்ட:, கேயூரவான் மகர குண்டலவான் கிரீடீ ஹாரீ ஹிரண்மயவபுர் த்ருதசங்கசக்ர:' என்றபடி பகவான் ஸூர்ய மண்டல மத்யத்திலிருப்பதுபோல

"கண்கள் சிவந்து பெரியவாய் வாயுஞ்சிவந்து கனிந்து உள்ளே
வெண்பல்விலகு சுடரிலகும்லகு மகர குண்டலத்தன்
கொண்டல் வண்ணன் சுடர்முடியன் நான்கு தோளன் குனிசார்ங்கன்
ஒண்சங்கதை வாளாழியான் ஒருவன் அடியேனுள்ளானே"

என்று நம்மாழ்வாரே பகவான் தன்னுள்ளே யிருப்பதாய் வெளியிட்டிருப்பதால் அந்த லெட்சணத்துடன் வகுளபூஷண பாஸ்கரோதயமாகவும் அந்தக்காந்தி உலகமெங்கும் பரவி வரவே ஸர்வ ஜனங்களும் அஞ்ஞான இருள் தொலையவே தங்கள் தங்கள் சுயநலங்கருதும் பேர்தத்துடன் எழுந்து விழிக்கலாயினர். அவ்வாறு விழித்தெழுந்தவர்களை நோக்கி யான் சொல்வதாவது 'ஓ உணர்ச்சியடைந்த மஹாஜனங்களே! நீங்கள் ஸேதுவை வணங்கி அக்கடலில் நீராடுவதுபோல் 'பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதனம் ஸர்வார்த்ததம் ஸ்ரீ சடகோபவாங்மயம், ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம் நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம்' என்பதின் கருத்துணர்ந்து ஸாமவேதஸாரமான திராவிட வேத ஸாகரத்தை வணங்கி, அதில் நன்றாய் மூழ்கி, 'நமஸ்கார ப்ரியோபாநு:' என்பதனுல் வகுள பூஷண பாஸ்கரனை 'யத்கோஸஹஸ்ரமப ஹந்தி தமாம்ஸி பும்ஸாம் நாராயணோவஸதியத்ரஸ சங்கசக்ர:, யன்மண்டலம் ச்ருதி கதம் ப்ரண மந்தி விப்ரா ஸ்தஸ்மை நமோ வகுளபூஷண பாஸ்கராய' என்னும் சுலோகத்தால் ஒவ்வொருவரும் துதித்து அடிக்கடி பிரணமம் செய்து பின்னர் 'கலியுங் கெடுங் கண்டு கொண்மின்' என்னும் பாசுரத்தையுங்கருதி தங்கள் தங்கள் இஷ்டஸித்தி அடைந்து உஜ்ஜீவிக்கும்படி உங்களைக்கேட்டுக்கொள்கிறேன்.

'மறைப்பாற் கடலைத்திரு நாவின் மந்தரத்தாற் கடைந்து
துறைப்பாற்படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமிர்தங்
கறைப்பாம்பணைப் பள்ளியானன் பரீட்டங்களித்தருந்த
நிறைப்பான் கழலன்றிச்சன்ம விடாய்க்கு நிழலில்லையே.'

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

**ஸ்ரீ அனந்தகிருஷ்ணய்யங்கார்,**
ஸ்ரீவானமாமலைமடம் ஆஸ்தான வித்வான், தென்திருப்பேரை.

ஸ்ரீமத் வகுளமாலாக்யா பத்ரிகா சுபஸம்யுதா| கேசவப்ரீதிஸம்யுக்தா ஜீயாதாசந்த்ர தாரகம்||

:o:

## வர்த்தமானங்கள்.

### திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்:—

சிலகாலமாக நிறுத்தப்பட்டிருந்த தமிழ்ச் சங்கத்தின் திருக்குறள், கம்ப

ராமாயண இலவசவகுப்புகளை காரியதரிசி சங்கக்காரியாலயத்தில் 11-2-37உ வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு மறுபடியும் ஆரம்பிவித்தார். பொருட்பால் அறிவுடைமை அதிகாரம் முதற்குறளான "அறிவற்றங் காக்கும் கருவி" விளக்கப்பட்டது, சங்கத்தலைவர் தமிழ் வரலாறு, தமிழின் சீர்மை, வேங்கட வெற்பன் பெருமை, தமிழின் தத்துவம், குமரித் தலைவர் பான்மை, கம்பர் கவி இன்பம், ஆழ்வார் அருமை, அகத்தியன் சேவை, மஹரிஷிகளும் காணாதபடியை ஆழ்வார் கண்டமை, முதலிய அரிய விஷயங்களை நன்கு போதித்தார். அன்று விஜயஞ் செய்திருந்த பண்டித திருவாலி ராமானுஜாச்சார்ஸ்வாமி கம்பர் கவியின் ஆழ்ந்த கருத்துக்களை பாலகாண்டம், சுந்தரகாண்டம், சடகோபரந்தாதி இவற்றில் அழகான பாடல்களைப்பாடி ஸ்வாபதேசத்துடன் நன்கு விளக்கி கேட்டோர் அனைவரும் மனமுருகுமாறு செய்தார். காரியதரிசி கூறிய வந்தனோபசாரத்துடன் ஸபை இரவு 9-மணிக்கு முடிந்தது.

22-2-37உ திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு திருவல்லிக்கேணி தவன உத்ஸவ பங்களாவில் ஸ்ரீ குலசேகராழ்வார் திருநக்ஷத்திரக் கொண்டாட்டம் மிக சம்ப்ரமத்துடன் ஆரம்பமாகியது. ஸ்ரீஉபவே வித்வான் ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரியார் ஸ்வாமி 'ஸ்ரீ குலசேகராழ்வார் வைபவம்' எனும் விஷயம்பற்றி வெகு ரமணீயமாக நான்கு மணி நேரம் பிரசங்கமாரி பொழிந்தனர். ஆழ்வார் தனியன் வரலாறு, வியாக்கியானம், அவதாரம், இடைவிடாத ராமபக்தி, கோயிலின் சிறப்பு, ஆராதவருள மதப்பாசுரவியாக்யானம், ஆழ்வாரின் ஸ்ரீரங்க யாத்திரை, ஸ்ரீ வைஷ்ணவ ததீயாராதனை, மந்திரிகள் சூழ்ச்சி, ராமாயண ஈடுபாடு, வான்மீகி கம்ப ராமாயண இன்கவிகளின் சிறப்பு, கோயிலடைதல், பாடி மகிழ்தல், குலசேகரவல்லியார் திருமணம், திருமலை அடைந்து வேண்டல், பலபடியாக அவாவுறுதல் முதலியவற்றை நன்கு தெளிவித்து, ஆழ்வார் பாசுரங்களின் சிறப்பு, நம் நாட்டின் மஹிமை, குலதர்ம மேன்மை, ஸ்திரீதர்ம வைலக்ஷண்யம், தர்மரக்ஷணத்துக்குப் பாடுபட வேண்டிய முறைகளையும் பற்றி விசதமாக விளக்கினார். ஸ்ரீ உபவே. பண்டித திருவாலி ராமானுஜாச்சார்ஸ்வாமி வந்தனோபசாரம் அளிக்கையில் தமிழ்ச்சங்கத்தின் அரியஸேவையைச்சிலாகித்ததுடன் மதக்கல்வியற்ற படிப்பு பயன்தராது என்று விளக்கி நம் சிறார்கள் நன்னெறியின் றொழுகும்படி செய்வதே முதற்கடமை என்று வற்புறுத்தி வந்திருந்தோரனைவர்க்கும் வாழ்த்துக்கூறினார். சந்தனம், பழம், பாக்கு, வெற்றிலை, முதலிய வழங்கிய பின்னர் கொண்டாட்டம் இரவு 7-30 மணிக்கு மங்களகரமாக முடிந்தது.

23-2-37உ செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு சங்கக் காரியாலயத்தில்

குறள் வகுப்பு நடந்தது. 'அறிவுடைமை' என்பதின் உண்மைத்தத்துவம் விளக்கப்பட்டது.

24-2-37௳ புதன்கிழமை மாலை 6-15 மணிக்கு இராயப்பேட்டை அய்யா முதலி தெரு 6-ம் நம்பர் இல்லத்தின் மேல்மாடியில் சங்கக்காரிய தரிசி 'அமலனுதிப்பிரான்' காலக்ஷேபத்துக்கு உபோத்காதமாக ஒரு உபந்யாசம் செய்தார். பிரமாணங்களின் அடைவு, பகவதவதாரம், ஆழ்வாரவதாரம், 'நம் பாணநாதன்' என்ற தன் விவரணம், மூன்றுவித வைலக்ஷண்யங்கள் விளக்கிக் கூறினர்.

25-2-37௳ வியாழன் மாலை 6-மணி முதல் 7-30 மணி வரையில் சங்கக் காரியாலயத்தில் இலவச வகுப்புகள் நடந்தன. 'அறிவற்றங்காக்கும்;' 'சென்ற விடத்தாற்;' 'எப்பொருள் யார் யார்வாய்' என்ற குறட்பாக்களும், கம்பராமாயணம் 'வெய்யமாமுனி வெகுளியால்'; வெஞ்சொன் மாமுனி வெகுளியால்' என்ற இருபாசுரங்களும் நன்கு விளக்கப்பட்டன.

## நாகூர் பிராஹ்மண சங்கம்:—

21-2-37௳ இரவு 8-மணிக்குக்கூடிய இச்சங்கத்தின் சாதாரண ஸபையில் திருவிதாங்கூர் மஹாராஜா ஆலயப்ரவேச ஸ்ரீமுகத்தைக் கண்டித்து ஒரு தீர்மானமும், இதனை அகில இந்திய பிராஹ்மண மஹாசபையின் கிளைச்சபையாக இணைக்கவேண்டுமென மற்றொரு தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## திருமயிலை வனபோஜன மஹோத்சவம்:—

28-2-37௳ ஞாயிற்றுக்கிழமை திருமயிலையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாஸப்பெருமாள், பிராட்டிமார்கள், ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் ஸமேதராய் பிலாத்தோப்பு மண்டபத்துக்கு எழுந்தருளி அதிவிசேஷமாக திருமஞ்சனம் கண்டருளி அங்கு சேர்ந்த ததீயர்களுக்கு கண்குளிரக் காட்சி தந்தருளினார். ஸ்ரீ வைஷ்ணவ ததீயாராதனம் மிக கீர்த்தியாக நடந்தது. விசேஷ அலங்காரத்துடன் பெருமாளும் தேசிகனும் வீற்றிருக்க ஸ்ரீ உபவே. வித்வான் ஸ்ரீரங்கம் சடகோபாச்சார் ஸ்வாமி மாலை 3-மணி முதல் 6-மணிவரை 'பேயாழ்வார் வைபவம்' என்னும் விஷயத்தை அதிரமணீயமாய் உபந்யஸித்தார். அவருக்கு விசேஷ மரியாதைகள் நடந்தன. சிலதினங்களாக சைதாப்பேட்டையில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ தில்லஸ்தான ஸ்ரீஸ்வாமி அங்கு மாலை எழுந்தருளி ஸேவை பெற்று அங்கிருந்தோரை அநுக்ரஹித்துச்சென்றார். வாத்தியக் கச்சேரி இனிது நடந்தது.

## ஸ்ரீமதுராந்தகம் மஹாஸம்ப்ரோக்ஷணம் :—

தைமீ 23உ (5-2-37) வெள்ளிக்கிழமை ஸ்ரீ மங்கினி ராம் ராம் குமார பாங்கர் ஸ்ரீமதுராந்தகம் மஹாஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவத்தை ஸ்ரீ உபவே திருக்கோட்டியூர் சுந்தர ஸௌம்ய நாராயணாச்சார்யர்ஸ்வாமியைக் கொண்டு நடத்தி வைத்தார். பல பெரியோர்கள் எழுந்தருளியிருந்தனர். தர்மசீலரான பாங்கர் நீடூழி வாழ்க. கைங்கர்யமே புருஷார்த்தம். ஆலயத்திருப்பணி ஆன்றோர்க்கும் அரியது.

## சென்னைமாகாண ஸநாதந தர்ம மஹா நாடு:—

இம் மஹாநாடு 6-2-37உ சனிக்கிழமை மதுரை பிரம்மஸ்ரீ ராவ் சாஹிப் யன். நடேசய்யர் அவர்கள் தலைமையில் திருவல்லிக்கேணியில் ஆரம்பமாயிற்று. வரவேற்புப் பிரசங்கத்தை ஸ்ரீ கிருஷ்ணதாஸ் அவர்கள் படித்தார். அக்ராஸநர் தமது பிரசங்கத்தை இரண்டுமணி இங்கிலீஷில் செய்தார். இரவு 8-மணிக்கு மஹாசபை கலைந்தது. இரவு 9-மணி முதல் 2-மணி வரை விஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டம் நடைபெற்றது. 7-2-37உ காலை 8-மணி முதல் 12-மணி வரையிலும், மாலை 3-மணி முதல் 8-மணி வரை மஹாஸபை நடந்தது. அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ:—

இது ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ர தயார்த்தப்ரகாசந பத்திரிகை. பத்ராதிபர் ஸ்ரீ உபவே. வடகரை ராமாநுஜாசாரியார் ஸ்வாமி. வருஷச்சந்தா ரூ. 1—12—0. தனிப்ரதி விலை அணா மூன்று. கிடைக்குமிடம் 24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ். இதன் இரண்டாந்தொகுதி 3ம் பகுதி வரப்பெற்றோம். இதனை ஸ்ரீவைஷ்ணவர்கள் நன்கு ஆதரிப்பாராக.

## ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணீ:—

இஃது ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால் பிரசுரம் செய்யப்படும் மாதப்பத்திரிகை. பத்திரிகாதிபர் ஸ்ரீ உபவே. அட்வகேட் ஏ. வி. கோபாலாச்சர்ரியார் ஸ்வாமி, வருஷச்சந்தா ரூ 1-8-0. 3-வது சம்புடம் 2-வது ஸஞ்சிகை வரப்பெற்றோம். கிடைக்குமிடம் 29, கிருஷ்ணபவனம், வேப்பேரி மதராஸ். ஸ்ரீவைஷ்ணவர்கள் இதனைப் போற்றக்கடவர்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

# துண்டு துணுக்குகள்.

அலர்மேல்மங்கை ஆதிநாயகி. ஆவினல் உயர்ந்தவன் அருங்காதி மைந்தன். இமையோர் தலைவன் இந்திரை கேள்வன். ஈரமுடைமை இம்பர்க்கணிகலம். உயிரினுஞ்சிறந்தது ஒழுக்கமுடைமை. ஊதியமில்லாக்காரியம் வீணே. எம்பெருமானர் ஏற்றமுடையவர். ஏதமிலாயிரம் மாறன் வாய்மொழி. ஐவகைப் பாதகம் அஞ்சி அகற்று. ஒன்றே செய்தல் நன்றே என்பர். ஓரான்வழியே யாம் வேண்டுவது. ஔவைப்பிராட்டி அருந்தமிழ்ச் செல்வி.

* * * *

சான்றோர் கவியெனக்கிடந்த கோதாவிரியினை வீரர்கண்டார். வீரராவார் இராமலட்சுமணர். அங்கு ஓர் ஓதிமம் ஒதுங்கக் கண்டான் உத்தமனான ரகுவீரன். உடனே உழையளாகும் சீதை தன்னடையை நோக்கிச் சிரியதோர் முறுவல்செய்தான். மாதவளான வைதேகியும் ஆண்டு வந்து நீருண்டு மீளும் போதகநடப்பநோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள். இஃதோர் கம்ப விசித்திரம்.

* * * *

ஸ்ரீராமபிரான் திருமஞ்சனம் கண்டருளி என்றும் நான்முகன் முதல் யாரும் யாவையும் நின்றபேர் இருளினை நீக்கி நீள்நெறி சென்று மீளாக்குறி சேரச்சேர்த்திடும் தன் திரு நாமத்தைத் தானுஞ்சாத்திக்கொண்டதாகக் கம்பர் கூறுகிறர். இவர் ஸ்ரீவைஷ்ணவர் என்பதற்கு இதுவுமோர்தக்கசான்று.

பாரத்வாஜி.

# பன்மணித்திரள்.

**அசுணமா :** நம்நாட்டுக்கவிகள் அசுணமா அல்லது கேகயப்புள் என்ற ஒரு பறவையைப் பற்றிப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். அதனையே கிஞ்சுகப்புள்ளென்றும் கூறுவர். ஜீவசிருஷ்டியில் இப்பறவை போன்ற நுட்பமான செவியை யுடையது வேறொன்றுமில்லை. மலையின் உன்னதப்

பிரதேசங்களிலுட் கார்ந்து நல்வீணை தடவி நல்ல பண்களை வர்சிக்குங்கால் இக்கிஞ்சுகம் பறந்த வண்ணமே ஸ்தம்பித்துக்கேட்டு ஆநந்தித்துக்கொண்டிருக்கும். அது இவ்வண்ணம் ஆநந்தத்தில் மூழ்கி யிருக்கிற சமயம் பார்த்து அதனைப்பிடிக்கக் கருதிவந்த கொடியர்கள் தம்முடன் கொணர்ந்த பறையை யெடுத்துப் பலமாயடிக்கவே அப்பறவை அக்கொடிய ஓசையைப் பொறுக்க முடியாமற் செத்துக் கீழேவிழும். இதனைக் கவிஞர் கூறும்படியைக் காண்மின். "பறை படவாழா அசுணமா" என்பது நான்மணிக் கடிகை. "மன்றயிற்றன்யாழ் கேட்ட மானையருளா, தறை கொன்று மற்றத னருயிரெஞ்சப், பறை யறைந்தாங்கு" என்பது நெய்தற்கலி. இதற்கு நச்சினார்க்கினியர் "வஞ்சனையாலே தான் வாசித்த யாழிசையைக் கேட்ட அசுணமாவை இவ்வின்ப முற்றதென்று அருள் பண்ணாதே, முன்பு செய்த வஞ்சனையைக் கெடுத்துப் பின்னை அதனரிய உயிர் போம்படி பறையைத் தட்டினாற் போல" என உரை கூறினர். "இருஞ்சிறைத் தொழுதியார்ப்பயாழ்ச்சத், திருங்கல்விடரளையசுண மோர்க்கும்" என்பது அகப்பாட்டு. அசுணங் கொல்பவர் கைபோன்றன்று, மின்பமுந் துன்பமு முடைத்தே" என்பது நற்றிணை. "குன்ரையசுணம்" என்பது மெய்ப் பாட்டியலுறை. அசுணமா விசையறி பறவை கேகயப்புள்" என்பர் பிங்கல நூலார். "யாழ்நறை யடுத்த வசுண நன்மாச் செவி பறை யடுத்தது போலும்" என்பது கம்பநாடரியற்றிய இராமாவதாரம். ஈண்டு திருவாய்மொழி 6-9-9ம் பாட்டு "ஆவிதிகைக்க.................. இன்னங் குருகாதோ" என்பதின் ஈட்டு வியாக்கியானப் பகுதி தருதும்." (காட்டிப் படுப்பாயோ)-நாட்டார் 'காணவிடிற் பிழையோம்' என்றிருக்கிற விஷயம் இவர்க்கு தர்சன மாத்ரத்திலே மோஹிக்கும் படியா யிருக்கிறதிறே. அசுணமா வென்று சில பக்ஷிகளுண்டு; அவை பிடிகொடாது ஒன்றுக்கும்; அவை பிடிக்க நினைத்தார் முற்படப் பாடுவார்கள்; அது கேட்டு நெஞ்சு நெகிழும்; அநந்தரம் பறையை யடிப்பார்கள்; இதில் வன்மையாலே பட்டுக் கிடக்குமாம். அது போல, இவர் பகவத் குணங்களிலே நைந்தபடி. இதர விஷய தர்சனத்தாலே முடியும்படி யானார்." அசுணமா முடியுமாப் போலே பகவதநுபவைகபரனும்ருதுப்ரக்ருதியாயிருக்குமவன் விஷய தர்சநத்தாலே முடியும்படி" என்பது ஸ்ரீவசந பூஷணம்.

## இராமாயண உள்ளுரை :—

இலங்கை சரீரம். இராவண கும்பகர்ணர்கள் அஹங்காரமமகாரங்கள். இந்த்ரஜித் முதலானோர் காமக்ரோதாதி துர்க்குணங்கள். சீதையைப் போன்றவன் சேதநன். ஆசார்ய துல்யன் அநுமான். சரீரமானது தசேந்த்ரியநனாந மனஸ்ஸால் அதிஷ்டிதம். சரீரம் போன்ற இலங்கை தசாந

நனான இராவணனால் அதிஷ்டிதம். சரீரம் ஸம்ஸாரக்கடல் நடுவிலும், இலங்கை ஸமுத்ர நடுவிலும் நிற்கின்றது. சீதை இலங்கையில் தளையப்பட்டு தைந்ய ஸ்திதியை அடைந்தாள். ஜீவன் சரீரத்தில் தளையப்பட்டு தீநஸ்திதியிலிருக்கின்றான். ஸ்ரீராமன் வ்ருத்தாந்தத்தை ஹனுமான் சீதைக்குச் சொன்னவண்ணம் ஆசார்யர்கள் சேதநனுக்குத் தத்வஹித புருஷார்த்தங்களை உபதேசிக்கின்றனர்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

———:(o):———

சிறு கதை.

## நெல்லிக்கனியின் விந்தை.

கொங்குமண்டலத்திலே தகடூர் என்னும் பட்டணத்திலே அதிகமான் என்ற ஓர் அரசன் ஆண்டுவந்தான். அக்காலத்து பாண்டிய நாட்டை அரசாண்டு வந்தவன் பசும் பூண் பாண்டியன் என்ற நெடுஞ்செழியன். இப்பாண்டியனுக்கும் அதிகமானுக்கும் போர் நடந்தது. திருக்கோவலூரைத் தலைநகராக்கி அரசு புரிந்த காரி என்பான் பாண்டியனுக்கு உதவி செய்தான். இப்போரில் அதிகமான் தோற்றுவிட்டான். நாடு நகரங்களை விட்டு தன் மனைவியானநாகையுடனும் மக்களுடனும் காடுகளிற்புகுந்து வசித்து வருவானாயினன் இவ்வதிகமான். முன் செய்த தவப்பயனால் இவ்வேந்தனுக்கு ஒரு ஸாதுவின் தரிசனம் கிடைத்தது. அவரை இவன் நன்கு பேணி வழிபட்டான். மனமுவந்த அம்முனிவர் வேண்டும் வரம்கேள் எனலும் மன்னவன் காரியை வெல்ல சக்தி அளிக்குமாறு வேண்டினான். கேட்ட பெரியார் "அதிகனே! நீ அவனை வெல்வாய்; ஆனாலும் அவனாலேதான் உனக்கு மரணமும் சம்பவிக்கும். இம்மலையிலுள்ள ஒரு பாறையின் பிளப்பிலே ஒரு கரு நெல்லிமரம் உளது. அதனிடம் இப்போது ஒரு கனி பழுத்திருக்கிறது. அதனைப் பறித்து உண்டால் நீ நெடுங்காலம் சீவித்திருப்பாய்" என்று கூறிவிட்டு மறைந்தனர்.

தவசியின் வார்த்தையில் பூரண நம்பிக்கையுள்ள அதிகன் மிகக்களிப்புடன் அவர் கூறிபபடியே சென்று அப்பழத்தைப்

பறித்து வந்தான். தெய்வத்துக்கு நிவேதனம் செய்து அதனை உண்ணப்புகுகையில் அறிவினும் ஒழுக்கத்தினுஞ்சிறந்த ஔவை மூதாட்டி அங்கு கடும்பசியுடன் வந்தாள். யாதேனும் உண்ண ஈ என்று வேண்ட வேறொன்று மில்லாமையால் அக்கனியையே உள்ளன்போடு அளித்தான். ஔவை அதனை உண்டு மகிழ்ந்தாள். அஃது அமிழ்தினும் சுவையுடையதாயிருக்கக்கண்டு அதன் விருத்தாந்தத்தை தமிழ்ப் பெருமாட்டி வினவலும் வரலாறு முழுமையும் விரித்துரைத்தான் அவ்வரசரேறு. கேட்டுவந்த ஔவையார் அவனைப்பலவாறு புகழ்ந்தேத்தி "நீ தமிழரசர் அனைவரினும் அதிகனாய் விளங்குக" என அன்போடு ஆசீர்வதித்து அகன்றனள்.

அன்று முதல் அதிகமான் மிக்கபலசாலியாக ஆகி தன் நாட்டைத்திரும்பப்பெற்றதுடன் காரி உள்பட வேந்தர் அனைவரையும் வென்று நெடுங்காலம் கீர்த்தியுடன் வாழ்ந்து வந்தான். அதிகன் அளித்தது ஒரு சிறு நெல்லிக்கனியே. அஃது பல்வகையாலும் சிறந்தவளான ஔவைப் பிராட்டி கையில் சேர்ந்தமையால் அவ்வதிகன் அவ்வளவு சீரும் சிறப்பும் பெற்றான். தருமத்தின் பயனானது கல்வி, அறிவு ஒழுக்கங்களால் தானபாத்திரமானவர் கையில் பட்டால் விசாலமான இவ் ஆகாயமும் சிறிதாம்படி மூடிவிடும். இதனால் தர்மமானது எல்லாவற்றினும் சிறந்த வலிமை உடையதென்றும், உதவி செய்யப் பெற்றுக்கொண்டவரது தகுதியின் அளவாகுமென்றும், பெரியாருக்குத்தொண்டு செய்வதால் ஒப்பற்ற நன்மை உண்டாகும் என்றும், மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம் என்றும் ஈகைக்குண முடையார் எவ்வித கஷ்டம் வரினும் ஈதலை விடார் என்றும், சாதுக்களின் பெருமை அளவிட முடியாதென்றும் நனமை கடைப்பிடித் தொழுகலே நலன் அளிக்கும் என்றும் அறியலாம்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

---

குறிப்பு:— பத்திரிகையின் ஸமஸ்த விஷயங்களுக்கும் மானேஜர், வகுளமாலை, 42-ஏ, வெங்கடாரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, என்று விலாசமிட்டு எழுத வேணும்.

# சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

## திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம். சேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந்தெடுத்த கட்டியான வெண்ணெயும் நறுமணத்த புத்துருக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வழுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்டவரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து. உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய்யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடையில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக்காது. மிக்க பல முண்டாகும். நிரம்ப அறிவும் ஊறும்.

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

**சங்க வித்வான்கள்.**

1. ஸ்ரீ உபவே பண்டித பூஷணம் தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே. ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உபவே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி.
4. ஸ்ரீ உபவே. ஸ்ரீரங்கம் சடகோபாசாரிய ஸ்வாமி (மாம்பலம்).

**தலைவர்.** ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.

**உப தலைவர்கள்.** ...

1. ஸ்ரீமான் வி. நரஸிம்மாச்சாரியாரவர்கள்.
2. ,, ஆர். சந்தானகிருஷ்ணய்யங்காரவர்கள்.
3. ,, யஸ். லக்ஷ்மி நரஸிம்மாச்சாரியாரவர்கள்.

**காரியதரிசியும், பொக்கிஷதாரரும்.** ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

**கமிட்டி மெம்பர்கள்.**

1. ஸ்ரீமான் ஆர். இராமசாமி ஐயங்காரவர்கள்.
2. ,, யஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, ஏ. வெங்கடாச்சாரியாரவர்கள்.
5. ,, வி. ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
6. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
7. ,, இ.கே. சபாபதி முதலியாரவர்கள்.

**காரியாலயம்** ... 42-ஏ. வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.

**முக்கிய நோக்கங்கள்.**

1. தமிழைப் பரவச் செய்தல்.
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்தல்.
3. தமிழ்ப் பெரியார் ஜன்ம தினங்களைக் கொண்டாடல்.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒருபத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்பிரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுதல்.
8. திரு நாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

Printed at the Lakshmi Kantha Press, 405, High Road, Triplicane
and published by P. R. Tirumalai Ayyangar at 42-A, Venkatrangam Pillai St., Triplicane, Madras.